விலை: சதம் 60

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆனி 29 றம்ழான் 10 இதழ் 149
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13-7-1981

எம்மிடம்......
இறக்குமதிசெய்யப்பட்ட
றெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சிற்
பொலித்தின் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்.
எச். இஸ்மால்ஜி அன் கோ
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

எம்மிடம்......
உள்ளூர், வெளியூர்
காப்பற் வகைகள் (Foor)
லொறிகளுக்கு
பொடி அடிக்கும்
(F) பிற்றிங்ஸ்........
மெழுகுசீலை வகைகள்
இன்னும் பல பொருட்கள் நியாய விலையில் கிடைக்கும்.
H. ESMAILJEE & Co
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

# இந்திராவின் விசேட பிரதிநிதி ஜனாதிபதியைச் சந்தித்தார்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் விசேட தூதுவர் திரு. யூனுஸ்கான், ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவை சந்தித்தார்.

பிரதமர் இந்திராவுடன் மிகவும் நெருங்கியவரான திரு. யூனுஸ்கான், பிரதமரின் அதி விசேடமான செய்திகளையே கொண்டுசெல்வது வழக்கமாகும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகத் தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் திருமதி இந்திரா காந்திக்கு இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் தலையிடக் கோரிக்கை விடுத்திருந்ததும், முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும், தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியும் அவரை நேரடியாகவே இவ்விடயம் பற்றிச் சந்தித்துப் பேசியதும், இவ்விடயத்தில் நியாயமானமுறையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி உறுதியளித்திருந்ததும் தெரிந்ததே.

திரு. யூனுஸ்கான் திருமதி இந்திராவின் விசேட செய்தி ஒன்றை ஜனாதிபதியிடம் கையளித்ததாகத் தெரிகிறது. [ம]

## 'பாஸ்போர்ட்' வழங்கும் போலித் திணைக்களம் பொலிசாரிடம் சிக்கியது

[கொழும்பு]

இரகசியப் பொலிசாரின் திடீர் வேட்டையைத் தொடர்ந்து புறக்கோட்டையில் இயங்கிவந்த கடவுச் சீட்டுக்களை [பாஸ்போர்ட்] வழங்கும் 'போலி' குடிவரவு, குடியகல்வுத் திணைக்களமொன்றின் மோசடிகள் அம்பலமாகியுள்ளன!

இப்போலித்திணைக்களம் 2,000 ரூபா செலவில் சகல நாடுகளுக்குமான போலிக்கடவுச்சீட்டுக்களை குறுகிய நேரத்தில் வழங்கிவந்துள்ளமையும் இரகசியப் பொலிசாரினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எல்லாநாடுகளுக்கும் செல்வதற்கான கடவுச்சீட்டுக்களை நீடிப்பதற்கும் விசாக்களை வழங்குவதற்கும்பாவிக்கப்படும் 'றபர்ஸ்டாம்புகளை' குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திலிருந்து இப்போலித்திணைக்களம் முன்னர் திருடியிருந்த விபரமும் அம்பலமாகியுள்ளது.

இம்மோசடியில் ஈடுபட்டுள்ளவர்கள் மிகவும் புத்திசாலித்தனமுள்ளவர்களென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

போலிக் கடவுச் சீட்டுக்களுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து வெளிநாடு

[6ம் பக்கம் பார்க்க]

## நயினை தேர் 16ம் திகதி

(வேலணை)

சரித்திரப் பிரசித்திபெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்கோவில் தேர்த்திருவிழா எதிர்வரும் 16ந் திகதி வியாழக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

## யாழ். நகரில் நேற்று நிகழ்ந்த கைக்குண்டுவீச்சு சம்பவம்: இருவர் காயமடைந்தனர்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நேற்றுப் பிற்பகல் நிகழ்ந்த கைக்குண்டு வீச்சு சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாகத் தலைமறைவாகி விட்ட சிலரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ். நகரில் சில மணிநேரம் பதட்ட நிலை காணப்பட்டது!

மக்கள் பீதிகொண்டு, நாலா பக்கமும் சிதறிஓடிய அதே நேரத்தில், பல வியாபாரிகளும் தங்களது கடைகளை அவசரம் அவசரமாக இழுத்துப் பூட்டத்தொடங்கினர்.

[6ம் பக்கம் பார்க்க]

## இந்திய-பாக். எல்லையில் துப்பாக்கிச் சண்டை!

புதுடில்லி, ஜூலை 12

இந்திய- பாகிஸ்தான் எல்லையில் நேற்று இடம் பெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஐந்து பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

இன்று நள்ளிரவுவரை கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி இந்திய எல்லைக்கு அருகில் மூன்று லட்சத்து ஐம்பதினாயிரம் பாகிஸ்தான் துருப்புகள் நிலைகொண்டுள்ளன என்றும் நிலைமை பதட்டமாக இருப்பதாகவும் தெரிய வருகிறது.

திறப்புவிழா அழைப்பிதழ்
கற்பகம்
கௌரவ திரு. சி. இராசதுரை பா. உ.
பிரதேச அபிவிருத்தி அமைச்சர்
அவர்களால்
244, காலி வீதி, கொழும்பில்
"கற்பகம்"
பனம்பொருள் அபிவிருத்திச்சபை
விற்பனை நிலையம்
14-7-1981 செவ்வாய்க்கிழமை
காலை 10-30 மணிக்கு திறந்துவைக்கப்படும்.
வீட்டு உபயோகத்திற்குரிய பனம்பொருட்களுடன் பனையிலிருந்து செய்யப்பட்ட அலங்கார பொருட்களும் மற்றும் அமைச்சின் கண்காணிப்பிலுள்ள பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும், பலவிசேட பொருட்களும் விற்பனைக்குண்டு
அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
என். பி. ஜெகநாதன்
தலைவர்
பனம் பொருள் அபிவிருத்திச்சபை
244, காலி வீதி,
கொழும்பு - 4
8-7-1981
0300

# 'யாழ். மக்கள் ஐக்கியத்திற்கு தலைவணங்குகின்றேன்'
## மட்டக்களப்பில் சிறிமா

[மட்டக்களப்பு]

''யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் ஒற்றுமையோடு வாக்களித்து ஐக்கிய தேசியக்கட்சி ஒரு ஆசனமும் பெறமுடியாதளவுக்குத் தோற்கடித்துவிட்ட யாழ். மாவட்ட மக்களின் ஒற்றுமைக்கு என்றும் தலை வணங்குகின்றேன்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மட்டக்களப்பு வெபர் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

மட்டக்களப்பு மாநகரசபை எல்லை நுழைவாயிலான ஊரணிச் சந்தியிலிருந்து வெபர் விளையாட்டு அரங்குவரை சுமார் 2 மைல் தூரம் 100 க்கு மேற்பட்ட அலங்காரவளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. வீதி யெங்கும் விழாக்கோலம் பூண்டிருந்தது. திருமதி சிறிமாவுடன் அவரது புதல்வர் திரு. அனுரா பண்டாரநாயக்கவும் வந்திருந்தார்.

முன்னாள் எம். பி. திரு. ராஜன் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருமதி ஸ்ரீமாவோ தொடர்ந்து பேசுகையில் யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலில் யாழ்ப்பாண மக்கள் பின்பற்றியது போன்று மட்டக்களப்பு மக்களும் எதிர் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிக்க முன் வரவேண்டும் என்றார். [மா]

## லண்டனில் பிரதமர்

லண்டன், ஜூலை 12

இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இன்று லண்டன் வந்துசேர்ந்தபோது பிரிட்டிஷ் அரசமட்டத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்படவில்லை என்று லண்டனிலிருந்து வெளியான ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

பத்துநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட இலங்கைப் பிரதமரை விமான நிலையத்தில் பிரிட்டிஷ் பிரதமரோ அல்லது பிரிட்டிஷ் பிரதமரின் பிரதிநிதியோ அல்லது பிரிட்டிஷ் பாராளுமன்ற அங்கத்தவர்களோ வரவேற்கவில்லை என்று தெரிவித்த ஏஜென்ஸி செய்திகள்; லண்டனிலுள்ள இலங்கை தூதுகமிஷனர் திரு. ஏ. ரி. மூர்த்தியும், ஏற்கனவே இங்கு வந்துள்ள இலங்கை அமைச்சர் திரு. காமினி திஸநாயக்காவும் வேறுசிலரும் வரவேற்றதாகக் கூறின.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சகலவிதமான தேவைகளுக்கும் தேவையான வயர்கள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீ கிருஷ்ணா ஸ்ரோர்ஸ், 86, காளிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். Telephone: 8041 (0298)

## வாடகைக்கு

நாவலர்-கஸ்தூரியார் வீதிச் சந்தியில் 1 கடை வாடகைக்குண்டு. விபரம்: 142, ஆஸ்பத்திரி வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். 0299

## பயிற்சிகள்

வெல்டிங் (Electric Arc and Gas) வயரிங் (I E E முறைப்படி) Radio Officers (கப்பல் களில்) பயிற்சிகள். வெளிநாடுகளிலும் கப்பல்களிலும் தொழில்கள் பெற தகுதி தரவல்ல NATIONAL INSTITUTES, 57, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 0281

## RENT

Rent a Car with or without Driver Seven Rupees a mile Sivaprakasam, Kaithady Nunavil, Chavakachcheri. 0305

வலி – கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திர

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தால் 6338 வெற்றுச்சாக்குகள் வரை கேள்விப் பத்திர மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. 1981-07-18 ம் திகதி சனிக்கிழமை மு.பகல் 12 மணி வரை கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை 17-07-81 ம் திகதி வெள்ளிக்கிழமை வரை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரம் ஒன்று ரூபா 1/-ம் வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக நிபந்தனைகளையும் விபரங்களையும் மேற்படி சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் யாவும் "பொது முகாமையாளர், வலி-கிழக்கு (தெ. ப.) ப.நோ. கூ. சங்கம், நீர்வேலி" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இக்கேள்விப் பத்திரம் சங்கத்தால் நிராகரிப்பதற்கு உரிமையுண்டு. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
நீர்வேலி,
1981-07 08 0295

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கந்தர் மடம் பழம்றோட், இல 27ஐச் சேர்ந்த காலஞ்சென்ற சந்திரசேகரம் பாலசிங்கம் என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் பாலசிங்கம் மனைவி பரமேஸ்வரி, 27, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மரணசாதன நிபாயாதிக்கம் இல. 3605

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ந்நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
தா. குலஞானம்
பதிவாளர்.

1981-ம் ஆண்டு ஆடி மாதம் 8-ந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. (0269)

## கேள்வி அறிவித்தல்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தில் 16-08-1981 முதல் 30-08-1981 வரையும் நல்லூர் கல்யாண மண்டப வளவுள் தொடர்ச்சியாக தினந்தினம் வைத்து இரவு 6-00 மணி முதல் 9-00 மணிவரையும் உபயோகிக்க 50 மீடிறன் (கேட்ஸ்) 400/230 உவோல்ற் 25 முதல் 40 வரையான கி.வோ. ஆ. கொண்ட ஆல்ரெட்ட பிறப்பாக்கி ஒன்று தேவை (Generator 25 to 40 Kva 400/230 Volts 50 Cycles A. C.)

இச்சேவையை வழங்கக்கூடியவர்கள் தாம் கோரும் கூலியைக் குறிப்பிட்டுப் பதிவு அஞ்சல் மூலம் "ஆணையாளர், யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்" என்ற முகவரிக்கு 23-07-1981 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

ச. சிவஞானம்
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்.
யாழ்ப்பாணம்,
10-07-1981 0294

## புதிய அதிபர்

[சுழிபுரம்]

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய புதிய அதிபராக திரு. எஸ். கனகநாயகம் இம்மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.

## கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நிருத்த விநாயகர் கோவில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

## இல்லப் போட்டி

(கோண்டாவில்)

கோண்டாவில் ஞானபண்டித வித்தியாசாலையின் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி அதிபர் திரு த. தருமலிங்கம் தலைமையில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

## ஏல விற்பனை

எம்மிடமுள்ள வெற்றுத் தாரங்கள் (Drums 45 கலன்) எதிர்வரும் புதன்கிழமை 15-7-81 காலை 10 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏலத்தில் விடப்பட்ட பொருட்களுக்கு உடனே பணம் செலுத்தி அன்று பிற்பகல் 4 மணிக்கு முன்பு எடுத்துச்செல்லவேண்டும்.

இடம்:
சீ-நோர் அபிவிருத்தித்திட்டம்
துறைமுகம்- காரைநகர். 0296

# 'உலக வங்கித் தலைவரிடம் நான் பேசியது என்ன?'

## 'அமிர்' தரும் விளக்கம்

(கொழும்பு)

"நான், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைக்கு கடன் பெற வெளிநாட்டில் முயற்சித்ததாகவும் அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் இங்கு கூறப்பட்டது முற்றிலும் திரிக்கப்பட்ட ஒன்றாகும்" எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: எனது வெளிநாட்டு விஜயத்தின் போது உலக வங்கித் தலைவர் திரு. டேவிட் கொப்பருடன் நான் நடத்திய பேச்சுவார்த்தைகள் முற்றிலும் திரிக்கப்பட்டிருந்ததை இங்கு வாசித்து ஆச்சரியமடைந்தேன்.

"திரு. டேவிட் கொப்பருடன் நான் நடத்திய பேச்சுவார்த்தையின் போது; ஒரு நாடும் மற்றும் சில மாவட்டங்களில் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டங்கள் இடம் பெறுகின்றன என்றும் அத்தகைய ஒருங்கிணைந்த திட்டங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியிலும் இடம்பெற வேண்டும் என்றும் வற்புறுத்தினேன். ஒரு தமிழ் பேசும் மாவட்டமாவது ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப் படவில்லை என்றும் கூறினேன்.

"நீர்ப்பாசனத் திட்டங்கள் புனரமைப்புபற்றி அத் திட்டங்கள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட நீர்ப் பாசனத் திட்டங்களின் அவசியம் பற்றியும், அவரிடம் வலியுறுத்தினேன்.

'மாவட்டங்களில் குறைந்த செலவில் இத்தகைய திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

'மகாதேவாப்பாலம், வல்லைவெளி பாலம், காங்கேசன் துறைத் துறைமுகம் ஆகியவை பற்றி கூறி உலக வங்கி நிதி இவற்றுக்கும் கிடைப்பது அவசியம் பற்றியும் தெரிவித்தேன்.

"இத்தகைய திட்டங்களை நாடு முழுவதும் மாவட்ட அபிவிருத்திச்சபைகள் மூலம் துரிதமாக அமுல்படுத்துவது சாத்தியமாகலாம் என்றும் அவரிடம் கூறினேன்.

'கடந்த 9 வருடகாலமாக தமிழ் பேசும் பிரதேசங்கள் புறக்கணிக்கப்படுவது பற்றி நான் கூறியவற்றை திரு. டேவிட் கொப்பர் கவனத்துடன் செவிமடுத்ததோடு ஜூலை மாதம் தான் இலங்கைக்கு விஜயம் செய்யும்போது இதுபற்றி பேசுவதாகக் கூறினார்

'அமைச்சரவை போன்ற பொறுப்பானசபை இப்படியாக காதில் கேட்கும் விஷயங்களைப் பெரிதுபடுத்தி பிரசாரம்செய்ததோடு, அதனைத் திரித்துக் கூறியிருப்பது என்னை ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. அதுமட்டுமன்றி இவ்விடயம் பத்திரிகைகளிலும், வானொலியிலும் மட்டுமன்று பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இத்தகைய நடவடிக்கைகள் மூலம் சட்டரீதியாக தங்களுக்கு இழைக்கப்படும் மனத்தாங்கலை வெளிப்படுத்துவதிலிருந்து தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி பயமுறுத்தும் முயற்சிகளாக இருக்கின்றன.' (ம-க)




பெட்டி ரூ. 6-50

## இலவசமாக அபிராமியந்தாதி

[சுழிபுரம்]

வழக்கம்பரை சனசமூக நிலையத்தினர் வெளியிட்டுச்செய்த அபிராமியந்தாதி முதலாவது பாடல் ஆய்வுரை நூல் இலவசமாக வழங்கப்பட்டுவருகிறது. நூலைப்பெற்றுக் கொள்ள விரும்புவோர்கள் நிலையச் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். [க]

## அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன்கோவில் அதிர்ஷ்ட லாபச்சீட்டு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1-வது | பரிசு | 402 | |
| 2-வது | ,, | 928 | |
| 3-வது | ,, | 8724 | ரவிச்சந்திரன், அளவெட்டி |
| 4-வது | ,, | 8078 | சா. முருகேசபிள்ளை, அளவெட்டி |
| 5-வது | ,, | 7074 | சிங்கராஜ, பம்பமடு |
| 6-வது | ,, | 174 | S. ஜலகரன், அளவெட்டி |
| 7-வது | ,, | 3710 | T. வசந்தி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை |
| 8-வது | ,, | 3952 | N. கலைச்செல்வன், மயிலிட்டி |
| 9-வது | ,, | 8448 | P. இராஜகுலசிங்கம், பன்னாலை |
| 10-வது | ,, | 6266 | S. A கருணாகரன், கந்தரோட்டம் சங்கானை |
| 11-வது | ,, | 3970 | உதயராஜன், காங்கேசன்துறை |
| 12-வது | ,, | 9671 | ச. ஸ்ரீரஞ்சன், அளவெட்டி |
| 13-வது | ,, | 784 | ஜெயசுந்தரம், K. K. S Road, சுன்னாகம். |
| 14-வது | ,, | 3789 | அ. கலைச்செல்வி, குளமங்கால், மல்லாகம். |

ரிக்கற்றுக்களைக் கொடுத்து உடன் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
அம்பாள் தொண்டர் சபை 0297

## 'சிசில்' குளிர்சாதனப் பெட்டிகள்

2 சதுர அடி, 6 சதுர அடி பெட்டிகள் உடனே பெற்றுக்கொள்ள முடியும்
8 சதுர அடி பெட்டிகள் - ஓடர் செய்து இரண்டு கிழமைகளில் பெற்றுக்கொள்ளமுடியும்.
மிகுதிப் தொகையே வரவுள்ளது. ஆகவே உங்கள் ஓடரை உடனே செய்துகொள்ளவும்.

* ஒரு வருட உற்பத்தியாளரின் உத்தரவாதம் உள்ளது
* உறுப்புகள் எம்மிடம் எப்பொழுதும் கிடைக்கும்
* திருத்தவேலைகள், ஸ்பிரே பெயின்ற் வேலைகள் எம்மால் செய்துகொடுக்கப்படும்

# சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்.

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 234

மணிவாக்கு

அநீதியால் அவஸ்தைப் படுவதைவிட, அநீதிசெய்வதால் இன்னும் அவமானகரமானது.
— பிளேட்டோ.

# நமது நோக்கு

## பசுக் கொலை

அப்புத்தளை எம். பி. டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார அண்மையில் பாராளுமன்றத்தில் பசுக் கொலையைப் பற்றி நிகழ்த்திய பேருரையைப் படித்தவர்கள் இந்நாட்டில் மீண்டும் "போர்த்துக்கேயர் காலம் உருவாகிறதோ" என்று அஞ்சும் அளவிற்கு அமைந்தது.

உரையை நன்றாகப் படித்தால் காரணம் முழுமையாகக் காணப்படும். பசுக் கொலையை சட்ட மூலம் ஒழிக்கவேண்டுமென்ற பிரேரணையை இதுகாறும் கொண்டுவர முடியாதது, ஆட்சிக்கு வந்த எந்த அரசும் தார்மீக சமுதாயத்தை உருவாக்குவதாக வாக்குப் பண்ணவில்லையென்பதே!

இந்த அரசு இந்த நோக்கைக் கொண்டதால், அதன் முக்கிய அம்சம் பசுக் கொலையை நாடு முழுவதிலுமிருந்து ஒழித்துவிடுவதே என்று ஆணித்தரமாக விளக்கினார் திரு. லொக்கு பண்டார. கருத்து நிறைந்த காலத்துக்கேற்ற உரை இது.

கருணையே தெய்வமாகக் கொண்ட புத்தபெருமானின் போதனைகளைய நினைவு கூர்ந்த அவர் இந்து மதத்திலுங்கூட பசு ஒரு தெய்வத்தின் முகூர்த்தத்தைக் குறிக்கின்றதென்றார்.

இந்து மதத்திலுங்கூட என்று அவர் சொன்னதை இந்துக்கள் அனைவரும் இரசிக்க நியாயமுண்டு. இந்து மதத்தின் ஒரு கிளையாகிய 'சைவம்' அந்த 'உம்'மை இழிவு சிறப்பெனக் கருதலாம். ஆயினும் பண்டைய இந்திய சரித்திரத்தைப் படித்தால் ஜைனரும் பௌத்தரும் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில், புலால் மறுத்தலே மிக முக்கியமான தருமமாகக் கொள்ளப்பட்டது புலப்படும்.

தமிழகத்திலுங்கூட சைவ மக்கள் 'சைவம்' இல்லாத உணவைக் கைவிடக் காரணமாயிருந்தது புத்தபெருமானின் போதனையென்று கொள்ளப்படுகிறது.

இது சைவ மக்களுக்கு, ஏன் தமிழ் மக்களுக்கு ஒரு குறையெனக் கருத இடமில்லை.

தன்னூன் பெருக்கற்குத்-
தான் பிறிதூன் உண்பான்

எங்ஙனம் ஆளும் அருள்?

எமது நாட்டில் 'சைவ' உணவு மட்டுமே உண்பவர்கள் தொகை மிகக் குறைவு. முனிவரின் இந்தக் குறளைப் பற்றி தொந்த கொள்ளலாகாது. எக்காலத்திலும் இது உண்மையாகத்தானிருக்கச் செய்யும்.

காப்பது வேறு; பெருக்குவது வேறு. தன் ஊனைக் காப்பதற்காக அன்ன புலால் உண்ணுதல், பசுவைக்கொலை செய்தல், பெருக்குவதற்காக!

போர்த்துக்கேயர் காலத்தை நாம் குறிப்பிட்ட காரணம், அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த அந்நிய தலைவனும் அவருடைய கூட்டத்தாரும் உண்ணுவதற்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டாரும் ஒவ்வொரு பசு முறை தவறாது கொடுக்க வேண்டுமென்பது கட்டளையாயிருந்தது.

இந்தப் பசுக் கொலைக் கஞ்சி சிதம்பரம் சென்றவர் யாழ். திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர். இந்த முனிவரின் தவத்தை மறந்த இக்கால சைவ மக்கள் கோவிலையே பசுக் கொலைக்களமாக உபயோகிக்கின்றனராகில் எமக்கு என்ன இடர்தான் நேராது?

ஆறுமுகநாவலர் பெருமான் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம்பிள்ளை போன்றவர்கள் இந்த அக்கிரமத்தை ஒழிக்க அரும் பாடுபட்டனர். இதனை மறந்து நடக்கும் மக்களுக்கு ஆண்டவன் அருள் கிடைக்குமா?

## பிரிட்டனில் பயங்கரவாதம்

"பார்வையில்லாமையை விடத் தீயது யாது?" என்ற வினாவுக்கு "பேராசை கொள்வது" என்று விடையளித்தவர் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்.

புகழ்படைத்த ஜனநாயக ஆட்சியைக் கண்ட பிரிட்டனில் கடந்த சில வாரங்களாக இளைஞர்கள்-வெள்ளையரும் கறுப்பரும் தீவிரமான வன்செயல்களில் ஈடுபட்டுவருகிறது உலகறிந்த விடயம்.

புகழ்பெற்ற நாட்டுக்கோ, சமூகத்துக்கோ மரணத்தை விடக் கொடியது அபகீர்த்தி. இதனை விளக்கி அரசைக் கண்டித்த எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு இரும்புப் பெண்ணென்று அழைக்கப்படும் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தாட்சர், வெள்ளை இளைஞரின் பேராசையே இவ்விதிய செயல்களுக்குக் காரணம் என்று சுவாமிகள் அளித்த தத்துவக் கூற்றை, ஆற்றுக் கொடுமையில் இரவல் வாங்கிக்கொண்டார். தங்கள் ஜனநாயகம் மெலிவடைந்து விட்டதென்றார்.

அதிருப்பட்ட எம். பிக்கள் சிலர் பிரதமரை "தாசக்காரி தாட்சர்" என்று வர்ணித்திருக்கிறனர்: அவருடைய பார்வையின்மையைக் கண்டித்திருக்கின்றனர்.

கடுமையான சொல்லாயிருந்தபோதும், பிரதமரின் அளவுக்கு மிஞ்சிய மிடுக்கும் கண்டிப்பும் இந்த நிலைபரத்தை உருவாக்கியுள்ளதென்பதில் உண்மை உண்டு.

இங்கிலாந்தில் இன்று 5 லட்சம் இளைஞர் வேலை இழந்திருக்கின்றனர் வருட முடிவில் இது அதிகரிக்கும் நிலை தெளிவு. இதுவே இன்றைய கலவரங்களின் அடிப்படைக் காரணம். இன்று இவர்களுக்கு அளிக்கும் பண நிவாரணம், தொழிலுக்குரிய வசதிகள் ஏற்படுத்தும் செலவுக்குப் பயன்படுத்தினால் வேலையின்மை குறைந்துவிடும்.

உழுத்துப்போன பொருளாதாரக் கொள்கைகளை உதறித் தள்ளி, செயற்திறமைகொண்ட தலைவர்கள் வேலைவாய்ப்புக்குரிய திட்டங்களில் உடனடியாக இறங்கவேண்டும்.

சிறப்பாக லண்டன் போன்ற நகரங்களில் வேலையற்ற வாலிபர்களே இவ்வித பயங்கரச் செயல்களில் இறங்கியுள்ளனர். பணவீக்கம் என்பது உண்மை. ஆனால் இளைஞர்களுக்குத் தொழில் நிவாரணம் முடியாத காரியமாகும். பேராசையென்று தத்துவம் பேசுவது வெறுந் தரித்திரத்தில் முடியுமென்பதைப் பிரதமர் தாட்சர் இனியாவது உணரவேண்டும்.

## யாழ். மாவட்டத்தில்
# கால்நடைவளர்ப்புக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்நடைவளர்ப்பு நடவடிக்கைகளுக்காக இரண்டு கோடி டாலரை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது.

யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெற்ற கால் நடை வளர்ப்பு அபிவிருத்தி சம்பந்தமான கூட்டமொன்றில்கலந்து கொண்ட ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த இந்திய நிபுணர்கள் இந்நிதியை வழங்கவுள்ளதாகத் தெரிவித்தனர்.

இக் கூட்டத்தில், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர், அரசாங்க கால்நடைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் கால்நடைவளர்ப்பு, அதன் அபிவிருத்திகள், சிறந்த மேச்சல் தரை, சிறந்த இனப்புவர்க்கத்தை நாட்டல், ஆடுகளுக்கென ஒரு பண்ணை என்பன போன்ற திட்டங்கள் பற்றி இம்மாநாட்டில் ஆராயப்பட்டது. அத்துடன் செயற்கை முறையில் இனப் பெருக்கல் முறையை நவீனப்படுத்தி தர உயர்வை மேற்கொள்வது குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டது.

பால் சேகரிப்பில் சுமார் 8,000 லிட்டர் பால் கிடைத்தும் அதனைச் சுத்திகரித்து நீண்ட நாள் பாவனைக்கு போத்தலில் அடைத்து விநியோகிக்கும் பகுதி ஒன்று அமைக்க வாய்ப்புகள் உள்ளதாக இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (மா)

## கூட்டணி பொதுச்சபை 18ல் கூடுகிறது

(யாழ்ப்பாணம்)
தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை 18ம் திகதி காலை நடைபெறும்.

நல்லூர் எம். பி. திரு மு. சிவசிதம்பரத்தின் அலுவலகத்தில் நடைபெறும் பொதுச் சபைக் கூட்டத்தைத் தொடர்ந்து செயற்குழு கூடும்.

## மக்கள் கருத்து

### 'கொலை முயற்சி' படுதோல்வி

தமிழ் இனத்தின் கலைக்கோயிலாய் விளங்கிய யாழ். பொது சன நூல் நிலையமும் எண்ணற்ற விலை மதிப்பிட முடியாத அரிய நூல்கள் வெளியீடுகளும் குண்டர்களால் அக்கினிக்கு இரையாக்கப்பட்டன.

மக்களுக்குச் சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டுவரும் இருபத்து மூன்றுவயது வாலிபனை 'ஈழநாடு' கொலை முயற்சியில் குண்டர்கள் படுதோல்வியடைந்துள்ளார்கள்.

அகந்தையும் ஆணவமும் கொண்ட கயவர்கள் யாராவது தப்பிப்பிழைத்ததாகவோ அட்டூழியத்தை நிலைநாட்டியதாகவோ எந்த வரலாறும் கூறவில்லை.

தூயநெறித் தோகையாம் திரௌபதியின் துகிலுரியத் துணிந்தவர்கள் நேரிலே, தர்மம் உருவெடுத்து நெடுந்துகிலாகக் கற்புநெறியை நிலைநாட்டவில்லையா?

பல சந்தர்ப்பங்களில் 'ஈழநாடு' நிவாரணப் பணியில் ஈடுபட்டு 'தர்மம் தலைகாக்கும்' என்ற இலட்சியத்தை நிரூபித்துள்ளது. அத்தகைய இலட்சியப்பத்திரிகையின்பணி வாழ்க, வளர்க என மனம் நிறைந்து இறைவனை பிரார்த்திக்கிலேன்,

க. சிதம்பரநாதன்.
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

## இந்திய – சீன உறவுகள்:
# 40,000 சதுர கிலோமீட்டரே பிரச்னையான அம்சமாகும்

சீன வெளிநாட்டமைச்சரின் இந்திய விஜயம் குறித்து இந்திய அரசு சார்பு பத்திரிகை "நெஷனல் ஹெரல்ட்" தெரிவித்துள்ள கருத்து இங்கு தரப்படுகிறது.

புதுடில்லி, ஜூலை 12
சீன வெளிநாட்டமைச்சர் ஹுவாங் ஹுவாவுடைய இந்திய விஜயம் இங்கு அரசியல் வட்டாரங்கள் கவனத்தை ஈர்த்துள்ளது.

1980க்குப் பின்னர் வந்த முதல் உயர்மட்ட சீன விஜயம் இதுவாகவே உள்ளது.

இந் யாவைப் பொறுத்த மட்டில் சீனா கைப்பற்றி வைத்துள்ள 40,000 சதுர கிலோமீட்டர் இந்திய பிரதேசம் பற்றிய பிரச்னையே இந்திய-சீன உறவுகளின் முக்கியமான அம்சமாகும். பேச்சுவார்த்தைகளின்போது தென்னாசியா, தென் கிழக்காசியா பற்றிய இரு நாடுகளின் கண்ணோட்டங்களிலும் வித்தியாசம் இருப்பது தெளிவாக புலனானது.

பாகிஸ்தானுக்கு சீன ஆயுத விநியோகம் ஆப்கானிஸ்தான், வியட்னாம் மற்றும் இந்தோ சீன நாடுகள் விவகாரம் பற்றிய அணுகலில் கருத்து ஒற்றுமை காணப்படவில்லை. இந்திய பத்திரிகைகளின் கணிப்பீட்டின் பிரகாரம், இப்பிரச்னைகளின் அசைத்தன்மை பற்றி மாத்திரமன்று, அவற்றை அணுகும்முறை பற்றியும் வித்தியாசம் நிலவுகிறது.

புதுடில்லி பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய ஹுவாங் ஹுவா, தென்னாசியா, தென் கிழக்காசியா குறித்து சீனாவின் கருத்துக்களில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதை ஏற்றுக்கொண்டார். ஆனாலும் பிரதமர் இந்திராகாந்தி பட்னவில் எல்லைப் பிரச்னைபற்றி விடுத்த கோரிக்கைகளுக்குப் பின்னர் இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்திப் பரிமாறும் ஹுவாங் ஹுவா சம்மதம் தெரிவித்தார்.

இந்த அறிக்கையே ஹுவாங் ஹுவா விஜயத்தின் பிரதான பலாபலன் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அந்த நேரத்தில் சீன வெளிநாட்டமைச்சரின் விஜயத்துக்குப் பின்னர் ராஜதந்திர சம்பிரதாயமான கூட்டறிக்கையோ அல்லது அறிக்கையோ விடுக்கப்படாததும் இங்கு அரசியல் வட்டாரங்களில் அர்த்தபுஷ்டியானதாக கருதப்படுகிறது. எல்லைப் பிரச்னைபற்றி ஹுவாங் ஹுவா பிரஸ்தாபித்தது இந்திய ராஜதந்திரத்துக்கு வெற்றியாக கருதப்படுகிறது.

இன்று நாமும் யதார்த்த தங்களை இந்தியா நினைவில் வைத்திருக்கவேண்டும். 1962ல் நடந்தவை (சீன - இந்தியப் போர்) திரும்பவும் நடக்காதென்பதற்கு உத்தரவாதம் தேவை.

## அடைக்கலந் தோட்டம்
# ஸ்ரீகந்தசுவாமி கோவில்
## இராஜகோபுர மகாகும்பாபிஷேகம்

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீகந்தசுவாமி கோவில் இராஜகோபுர பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று மிகக் கோலாகலமாக நடைபெறுகின்றது. புத்தூரைச் சேர்ந்த பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ மா. வைத்தியநாத சிவாச்சாரியாரால் நடாத்தப்படும் கும்பாபிஷேக வைபவம் இக்கோவிலுக்குக் குறிப்பிடத்தக்க சிறப்பிடத்தை வகிக்கின்றது.

அராலியூரைச் சேர்ந்த சிற்பாசாரியார் திரு. வி. தம்பிராசா குழுவினரால் மிகக் கவர்ச்சிகரமாகக் கட்டப்பெற்ற இராஜகோபுரம் 57 அடி உயரமுடையது. ஐந்து மாடங்களைக் கொண்டதும் இரட்டைப் பஞ்சாங்க வேலைப்பாடுகளைக் கொண்டதுமான இந்த இராஜகோபுரம் மிக அழகாக அமைந்திருக்கின்றது.

இக்கோவில் 18-ம் நூற்றுண்டில் இராமேசையர் விசுவநாத ஐயர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. பிராமண உத்தமர்களாலும் வேளாளப் பிரபுக்களாலும் நிர்வகிக்கப்பட்டு வந்த இக்கோவில் நிர்வாகம் தற்போது கோவில் வணக்கம் செய்வோரால்நியமிக்கப்பட்ட பரிபாலனசபையால் நிர்வகிக்கப்பட்டுவருகிறது. சைவப் புலவர், பண்டிதர், வழக்கறிஞர் திரு. நா. ஏகாம்பரம் அவர்களைத் தலைவராகவும், ஓய்வுபெற்ற அதிபர் திரு. த. சிதம்பரநாதன் அவர்களைச் செயலாளராகவும் கொண்ட பரிபாலனசபை மிகச் சிறந்த முறையில் நிர்வாகத்தை நடாத்திவருகின்றது.

பழமையும்வரலாற்றுபெருமையும் வாய்ந்த இக்கோவில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற விசேட இடம் வகிக்கின்றது. கருவறையிலே மாவல்லி, தெய்வானை சமேதராய் நின்றநிலையில் கோலத்துடன் காணப்படும் கந்தசுவாமியாரின் திருக்கோலம் காண்பவர் நெஞ்சத்தைக்கொள்ளை கொள்ளும் அழகு.

[5-ம் பக்கம் பார்க்க]

## யாழ். மாவட்ட
# அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் சகல உறுப்பினர்களும் இன்று நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தின் அலுவலகத்தில் கூடுவார்கள்.

இச் சந்திப்பின்போது கூட்டணி எம். பிக்களும் கலந்து கொள்வார்கள்.

இக் கூட்டத்தில், சில முக்கிய விஷயங்கள்பற்றி ஆலோசிக்கப்படும்.

## ரமழான் சிந்தனை

இதோ நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள், யார் ரமழான் மாதத்தில் நன்மைபெறும் நோக்குடன் நின்று வணக்கம் புரிகின்றாரோ அவரின் முன் சென்ற பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

(ஆதாரம்—புஹாரி)

ஸஹர் முடிவு: 4-27 நோன்பு திறக்கும் நேரம்: 6-32

—தொகுப்பு: மௌலவியா பௌபியா கரீம்

## பாகிஸ்தானுக்கு அமெரிக்க இராணுவ உதவி

வாஷிங்டன், ஜூலை 12

அமெரிக்க - பாகிஸ்தான் ஆயுத ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்காவினால் வழங்கப்படவுள்ள 100 கோடி டாலர் பெறுமதியான யுத்த விமானங்களையும், ஆயுதங்களையும் கொள்வனவு செய்வதற்காகப் பாகிஸ்தான் உயர்மட்ட இராணுவத் தூதுக் குழு ஒன்று நேற்று வாஷிங்டன் புறப்பட்டது.

"எப்-16" யுத்த விமானங்களையும், ஆயுதங்களையும் அமெரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ள இத் தூதுக் குழுவுக்கு பாதுகாப்பு அமைச்சர் ஜனாப் ரஹீம்கான் தலைமைதாங்குகிறார்.

பாகிஸ்தானுக்கான மிகுதி யுத்த விமானங்களையும், ஆயுதங்களையும் ஐந்தாண்டுகாலத்தில் அமெரிக்கா வழங்கவுள்ளது.

அமெரிக்க - பாகிஸ்தான் ஆயுத ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு 300 கோடி டாலர் பெறுமதியான யுத்த ஆயுதங்களை வழங்கவிருப்பது தெரிந்ததே. (வெ)

## எண்ணெ உற்பத்தி குறைப்பு

அல்ஜியர்ஸ், ஜூலை 12

அல்ஜீரியா, லிபியா, நைஜீரியா, ஹபோன் ஆகிய ஆபிரிக்க நாடுகள் எண்ணெ உற்பத்தியை ஐம்பது சதவிகிதம் குறைக்கவுள்ளன.

நாளொன்றுக்கு 50 லட்சம் பீப்பா எண்ணெயை உற்பத்தி செய்துவந்த இந்நாடுகள், இம் மாதம் முதல் உற்பத்தியை 27 லட்சம் பீப்பா எண்ணெயாகக் குறைக்கவுள்ளன. இதைத் தொடர்ந்து ஓமான், அபுதாபி, மெக்சிக்கோ ஆகிய நாடுகளும் எண்ணெ உற்பத்தியைக் குறைக்கலாமென நம்பப்படுகிறது. (வெ)

## காவிரி நீர் பங்கீடு மாநாடு

சென்னை, ஜூலை 12

காவிரி நீர்ப் பங்கீடு பற்றிய முதலமைச்சர்களின் மாநாடு இம்மாதம் 22ந் திகதி புதுடில்லியில் ஆரம்பமாகவுள்ளது. இம்மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும் கலந்து கொள்ளவுள்ளார். (வெ)

# பலியான குடும்பங்களுக்கு இந்திரா ரூபா 6லட்சம் உதவி

## மாண்டவர்தொகை 325ஆக அதிகரிப்பு

பெங்களூர், ஜூலை 12

கர்நாடக மாநிலத்திலுள்ள பெங்களூர், மைசூர் ஆகிய நகரங்களில் கள்ளச் சாராயம் குடித்துப் பலியானவர்களின் தொகை 325 ஆக அதிகரித்துள்ளது.

கள்ளச் சாராயம் குடித்ததினால் பெங்களூரில் 302 பேரும், மைசூரில் 23 பேரும் பலியாகியுள்ளனர்.

பலியானவர்களின் குடும்பங்களுக்கு 6 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவைப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி வழங்கியுள்ளார்.

பலியானவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா இந்நிதியிலிருந்து வழங்கப்படவுள்ளது. (வெ)

## கலைஞர்களுக்கு இலவச விமான சேவை?

சென்னை, ஜூலை 12

கலைஞர்களுக்கு இலவச உள்நாட்டு விமானப் பயணச் சேவையை அளிப்பது பற்றி மத்திய அரசு பரிசீலனைசெய்து வருவதாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. ஏ. பி. சர்மா நேற்றுச் சென்னையில் தெரிவித்தார். (வெ)

## சிரியா ஜனாதிபதி அல்ஜீரியா விஜயம்

டமாஸ்கஸ், ஜூலை 12

சிரிய ஜனாதிபதி ஜனாப் அல்-அசாத், மத்திய கிழக்கு நிலைமை குறித்து லிபியா, அல்ஜீரியா ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இது குறித்துப் பாலஸ்தீனத்திற்கு விஜயஞ்செய்து, அந்நாட்டுத் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யசீர் அரபாத் அண்மையில் லிபியாவுக்கு விஜயம் செய்து, அந்நாட்டு ஜனாதிபதி கேர்ணல் கடாபியுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். (வெ)

### தேசிய சுகாதார விழா

## கட்டுரைப் போட்டி பரிசு பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

தேசியசுகாதாரவாரவிழாவையொட்டி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில், பாடசாலை உயர் வகுப்பு மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற கட்டுரைப்போட்டியில் செல்வி இ. புஷ்பராணி முதலிடத்தைப் பெற்றார்.

சரசாலை பொது சௌக்கிய பரிசோதகர் திரு. ஆர். எம். சேவியர், வித்தியாலய அதிபர் திருமதி கணேசலிங்கம், உடற்பயிற்சி ஆசிரியர் திரு. வாமதேவன் ஆகியோர் இந்தக் கட்டுரைப்போட்டிக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

கட்டுரைப் போட்டியில் இரண்டாமிடத்தை செல்வன் ச. செல்வலிங்கமும், மூன்றும் இடத்தை செல்வி இ. சுமித்திராவும் பெற்றனர்.

இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சா. சண்முகலிங்கம் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். (ஆ)

## வவுனியாவில் மனித உரிமைகள் தினம்

(புளியங்குளம்)

வவுனியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையே மனித உரிமைகள் தினம் தொடர்பான பேச்சுப் போட்டியொன்றை நடாத்துவதற்கு வவுனியா மாவட்டப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ். பி. சிவபாதம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (ஆ)

# இன்றைய பலன்

ஆனி மாதம் 29 ம் திகதி

திங்கட் கிழமை

(13-7-81)

மேடம்: அடுத்தடுத்து கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர், சிலர் வாழ்க்கையில் பொருள்முடையும் ஏற்படலாம். நண்பர்களால் தொல்லைகள் தோன்றக் கூடும். திட்டமிட்டுச்செயலாற்றவும்.

இடபம்: கைகொடுத்து உதவுவதற்கு தந்தை முன்வருவார். காரியசித்தி கிட்டும். நீண்டநாள் எதிரிகள் இன்று மீண்டும்நண்பர்களாவார்கள். திருப்தியற்ற தினம்.

மிதுனம்: செய்தொழிலில் தடைகள் உருவாகும். மேலதிகாரிகளின் கழுகுப்பார்வை உங்கள் பக்கம் திரும்பும். சகோதரர் ஒருவருடன் பகைத்துக்கொள்ளவேண்டியும் ஏற்படலாம், நிதானம் வேண்டும்.

கடகம்: அதிஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்குக் கிடைக்கலாம். திரைப்படத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு உச்சாகமளிக்கக்கூடும் செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவு தப்பாமல் உண்டு.

சிங்கம்: துன்பத்தின் ரேகைகள் நிழலாட்டம் போடும், துணைவரின் உடல்நலம் கெடும் பணமும் பெருமளவில் செலவாகும்.

கன்னி: அவசர புத்தியினால் விபரீதங்கள் விளையக்கூடும், கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும். அதிக சிந்தனைக்கு இடம்கொடாது துணிவே துணையென இருக்கவும்.

துலாம்: மனம் நிறைந்த வாழ்வு இன்று கிடைக்கும். இனபந்துக்களின்கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு. வியாபாரிகளுக்கு திருப்திகரமான முன்னேற்றமுண்டு, வரவேற்கவேண்டிய தினம்.

விருட்சிகம்: உணர்ச்சிமயமான தினம், மனப்போராட்டங்கள் நடைபெறும், உடல் நலம் பாதிக்கப்படலாம், குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்திமனப்பான்மையை உருவாக்கும்.

தனு: அக்கப்பணியில் ஈடுபடுவீர்கள் பிறருடைய ஆதரவு தாராளமாகக்கிடைக்கும் தாய் வழிமூலம் நற்செய்தி கிடைக்கலாம் எதிர்பாராத விருந்துபசாரத்துக்கும் இடம் ஏற்படும்.

மகரம்: எதிர்பார்த்த பொருள் வரவுக்கு இடமுண்டு. பூமியால் லாபம் கிடைக்கும். புத்திரர் வழியாலும் நன்மைகள் உண்டு.

கும்பம்: உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் வருவர். உற்சாகம் குன்றும் பிரயாணத்தின் போது பொருள் தவறக் கூடும். சிலருக்கு உஷ்ணரோக சம்பந்தமான நோய் ஏற்படும்.

மீனம்: புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள் இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்துக்குச் சிறந்த பயனை அளிக்கும் சாஸ்திரவழியாலும் நன்மைகள் சேர்வதற்கு இடமுண்டு நல்லதினம்.

சோதிடகலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை




நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் அரசாங்க எச்சரிக்கை:
புகை பிடித்தல் உடல் நலத்திற்குக் கேடாகலாம்.
ஒன்று சதம் 40.

வெலிங்டன் (யாழ்நகர்)
10-30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
10-30, 2-30, 6-00, 9-30
அழியாத கோலங்கள்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

2-வது ஹவுஸ்புல் வாரம்
தினசரி 4 காட்சிகள்
ஹரன் (யாழ். நகர்)
காட்சிக்கு காட்சி மகளிர் கூட்டம்
வேலியைத் தாண்டியதால் ஏற்பட்ட முடிவு என்ன?
அற்ப ஆசையின் விளைவு என்ன?
சரத்பாபு, சுஜாதா,
சென்ற ஆண்டின் சிறந்த நடிகை சரிதா நடித்த
புதுமை டைரக்டர் K. பாலச்சந்தரின்
நூல் வேலி
(கலர்) தொலைபேசி: 331

சாந்தி 8-வது ஜனத்திரள் வாரம்
(யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா, பாலாஜி, மேஜர், தேங்காய்
தர்மராஜா
(வண்ணச் சித்திரம்)

இன்னும் சிலதினங்கள் மட்டும்.
தினசரி 4 காட்சிகள்
வின்சர் (யாழ்ப்பாணம்)
ஜெமினி, பத்மினி, ஜெயலலிதா, சுருளிராஜன், எஸ். வி. சுப்பையா
ஆதி பராசக்தி
(கலர்—புதிய பிரதி)
பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை உண்டு

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
★ சிவாஜி ★ ஜெய்சங்கர் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★மனோகர் ஜானகி
சக்கரத்தி பைரவன்
(வண்ணப்படம்)
From 17-7-81
MAN FROM HONG KONG

LAST THREE DAYS
RAJAH Jaffna Daily 10-30, 2-00, 4-30 7-00 and 9-30
Dont Miss! Last Chance!
Meet Today!
THE BIG BOSS
(Scope and Color)
Adults only வயதுவந்தவர்களுக்கு மட்டும்
17-7-81 முதல்
எம்.ஜி.ஆர் - லதா
பல்லாண்டு வாழ்க

'ஈழநாடு' எரிவது பற்றி யாழ். பொலிஸுக்கு

# தொலைபேசியில் கூறியபோது 'ஏச்சும், பேச்சுமே கிடைத்தது'

## வைத்தியர் சோமசுந்தரம் டி. ஐ. ஜிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 1ம் திகதி "ஈழநாடு" அலுவலகம் தீப்பற்றி எரிவதைக் கண்ணுற்றதும் யாழ். பொலிசாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இது பற்றிக் கூறினேன். அப்போது எனது தொலைபேசி அழைப்புக்குப் பதிலளித்த பொலிஸ் உத்தியோகத்தர் என்னைச் சிங்களத்தில் தூஷண வார்த்தைகளால் ஏசி "உன்னைக் கடித்துயத்தற வேண்டும்" என்று கூறிவிட்டு தொடர்பையும் துண்டித்துக் கொண்டார்.

இவ்வாறு யாழ். முறிவு நெரிவு வைத்தியர் சி. சோமசுந்தரம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்திக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வைத்தியர் சோமசுந்தரம் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ஈழநாடு" அலுவலகத்திற்கு அருகில் உள்ள வீட்டில் நான் வசிக்கிறேன். சம்பவதினம் இரவு 9-35 மணியளவில் "ஈழநாடு" அச்சகம் தீப்பற்றி எரிவதைக் கண்டேன். நான் உடனே, பொலிஸ் நிலையத்தோடு 9-40 மணியளவில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன், மீண்டும் மீண்டும் பொலிஸ் நிலையத்தோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். அதற்குப் பதிலாக ஏச்சும் பேச்சுமே எனக்குக் கிடைத்தது. இறுதியில் இரவு 10 மணியளவில் மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ள முடிந்தது. "நீங்கள் தீயை அணைக்க முயலுங்கள்; நாம் உதவிக்கு வருகிறோம்" என அவர் கூறிய போதிலும் கடைசிவரை எவரும் அங்கு வரவில்லை.

எனவே இந்நிலையில் எனக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (இ)

## ஸ்ரீகந்தசுவாமி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குக்கோலமாக விளங்குகின்றது. இக்கோவிலில் மிகவும் பழமையான அரச மரம் ஒன்று தலவிருட்சமாக விளங்குகின்றது. இந்த அரச மரம் இக்கோவில் ஆரம்பமாகுமுன்னர் இருந்ததாகக் கூறப்படுகிறது. இக்கோவிலில் ஆதிடபம், அமிர்தசுரபி, சுந்தாமிர்தபுஷ்கரணி, சரவணப்பொய்கை ஆகிய நான்கு தீர்த்தங்கள் உள்ளன. இவற்றில் சரவணப்பொய்கையின் தீர்த்தமே சுவாமிக்கு கொடுக்கும் தீர்த்தமாக விளங்குகின்றது.

இன்று இக்கோவிலில் நடைபெறும் இராஜகோபுர மகா கும்பாபிஷேகமும் குறிப்பிடத்தக்க விசேட நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. இந்த நன்னாளில் இப்பெருமானைப் பக்தி சிரத்தையோடு வழிபட்டு நல்லருளைப் பெற்றுய்வோமாக.

- நகுலன்

## பயங்கரவாதத்தை அன்பினால் முறியடிக்க முடியும்"

(அரியாலை)

விஞ்ஞானமும், அறிவும் வளர்ந்து வரும் இந்த நாட்களில் பயங்கரவாதமும் வன்செயல்களும் பெருகி வருவது துக்ககரமானதாகும். பயங்கரவாதத்தினாலும் வன்செயல்களினாலும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. சமாதானத் தூதராகவும் மதபீடத் தலைவராகவும் விளங்கும் பாப்பாண்டவரின் உயிருக்கு உலை வைக்கக்கூடியதான நிலையில் பயங்கரவாதம் வளர்ந்து வருவது மிகவும் அருவருக்கத்தக்கதாகும்.

இவ்வாறு யாழ்ப்பாண அர்ச்சிஷ்டக்கள் அருட்திரு சாம் டி. ஹேரிங்டன் அடிகளார் நல்லூர் பரிசுத்த யாக்கோபு ஆலயத்தில் "பயங்கரவாதத்தினை சிலுவையில் அறைந்து கொல்லப்பட்ட யேசு பெருமான் தன்னைக் கொலை செய்தவர்களை மன்னித்தார்; அதைப் போல கிறிஸ்துவின் பாதையில் நடந்து செல்லும் நாமும் மன்னிப்பதின் மூலமும் அன்பு செலுத்துவதின் மூலமும் பயங்கரவாதத்திற்குத் தீர்வு காண முடியும்" என்றும் அவர் கூறினார். (அ)

## உழைக்கும் கரங்களே முதுகெலும்பு

(சுழிபுரம்)

"உழைக்கும் கரங்களே எமது நாட்டின் முதுகெலும்பாகும் நாட்டை அபிவிருத்தி செய்யும் பணியில் இளைஞர்கள் அதிகம் ஈடுபட்டு உழைக்க வேண்டும். எமது மூதாதையர்கள் நாட்டுத் தேவைக்கு வேண்டிய உணவுப் பொருட்களை உற்பத்திசெய்து தன்னிறைவு கண்டனர். இன்றும் அதேபோல எமது விவசாயிகளும் உணவில் தன்னிறைவு பெறுவதற்குத் தானியங்களை உற்பத்திசெய்ய முன்வரவேண்டும்"

இவ்வாறு பண்ணாகம் இளம் விவசாயிகள் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் திரு ஏ. கிருஷ்ணர் குறிப்பிட்டார். பண்ணாகம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் கழகத் தலைவர் செல்வன் த. ஸ்ரீகணேசமூர்த்தி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு ஏ கிருஷ்ணர் மேலும் பேசுகையில் கூறியதாவது: "எமது பகுதியிலுள்ள இளைஞர்கள் ஒருவராவது தெளிகருவிகளில் பயிற்சிபெறச் செல்கிறார்களில்லை இக்குறை நிவர்த்திசெய்யப்படவேண்டும் என்றார்

யாழ் மாவட்டசபை உறுப்பினர் திரு ச பூபாலசிங்கம் விவசாய உத்தியோகத்தர் திரு அன்று ஜோசப் திரு மு ஆனந்தகுமாரன் பண்டிதர் ப இராசகுரு உட்படப் பலர் உரையாற்றினர்

## 'விடிவெள்ளி' சிறுகதைப் போட்டி

(பச்சிலைப்பள்ளி)

"விடிவெள்ளி" க. பி. முத்தையாவின் நினைவு தினத்தை யொட்டி, யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் சிறுகதைப் போட்டியொன்றினை நடத்தவுள்ளது.

அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் இச்சிறுகதைப் போட்டிக்கு முதற் பரிசாக 300 ரூபாவும், இரண்டாம் பரிசாக 200 ரூபாவும், மூன்றாம் பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். இவற்றினைவிட 50 ரூபா கொண்ட எட்டு ஆறுதற் பரிசுகளும் வழங்கப்படும்.

சிறுகதைகள் இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

வெஸ்லி (கச்சேரியடி)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி மாலினி பொன்சேகா
பைலட் பிரேம்நாத்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-பிரமிளா
கவரிமான் (கலர்)

தமிழகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெள்ளிவிழா சித்திரம்
மனோகரா தினசரி 4 காட்சிகள் [யாழ்ப்பாணம்]
ஒரு கை ஓசை
(கலர்)
பாக்கியராஜின் கதை-வசனம்-டைரக்ஷனில் உருவான வண்ணச் சித்திரம்
★ பாக்கியராஜ் ★ அஸ்வினி
★ சங்கிலிமுருகன்
மற்றும் பலர் நடித்தது
ஆசனங்களுக்கு முந்திக் கொள்ளுங்கள்

ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
எங்கள் தங்கம்
(புத்தம்புதிய பிரதி — கலர்)
எமது அடுத்த வெளியீடு
பாக்கியராஜாவின்
சுவர் இல்லாத சித்திரங்கள்

# "அருட் கவர்ச்சி பெற்ற அசாதாரண தலைவர் 'தந்தை செல்வா'"

## நினைவுச் சொற்பொழிவில் வில்சன்

[யாழ்ப்பாணம்]

"திரு. செல்வநாயகம் தமிழ் தேசிய இனத்தின் ஸ்தாபகர், அதன் தந்தை, வட இலங்கையிலே நிறுவப்பட்டிருந்த தமிழ் இராச்சியத்தை இடையில் புகுந்த போர்த்துக்கேயர் 1618ல் அழித்தபின், தமிழ் தேசிய இனத்தை மீண்டும் உயிர்ப்பித்து அதற்குப் புத்துயிர் கொடுத்த பெருமை திரு. செல்வநாயகத்தையே சாரும். ஆரம்பத்திலே சாத்தியமற்ற ஓர் இலட்சியமாக தோன்றிய இதனை வேறு எந்தத் தமிழ்த் தலைவரும் சுதந்திரத்திற்கு முன்னரோ பின்னரோ சாதிக்கவில்லை."

இவ்வாறு கனடா நியூபுறுன்ஸ்விக் பல்கலைக்கழக அரசியல் பீடத் தலைவர் கலாநிதி ஏ. ஜே. வில்சன் தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

தந்தை செல்வா அறங்காவல் குழுத் தலைவர் திரு. கு. நேசையா தலைமையில் கடந்த சனிக்கிழமை மாலை இச் சொற்பொழிவு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

கலாநிதி வில்சன் தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது; "பிரபல ஜெர்மன் சமூகவியலாளர் மக்ஸ் வெப்பர் கூற்றுப்படி மூன்று வகை தலைமையுண்டு. முதலாவது வகைத்தலைமை மரபிலும் பாரம்பரியத்திலும் வேரூன்றியிருக்கின்றது. இரண்டாவது வகை நடைமுறையிலுள்ள சட்ட அமைப்பில் தங்கியிருக்கின்றது. மூன்றவது வகைத் தலைமை அசாதாரணமானது; நெருக்கடி நிலைமையில் தோன்றுவதொன்றாகும். பண்டைய கிரேக்கர் இத்தகைய தலைமையை 'கரிஸ்மா' என்றழைத்தனர். இந்த கிரேக்கச் சொல்லின் பொருள் 'இறைவனிடம் தனி அருள் பெற்றவர்' என்பதாகும். இத்தகைய அருள் பெற்ற தலைவர் மக்களைப் பெரிதும் கவர்ந்து ஈர்ப்பவர்.

"அருட் கவர்ச்சி பெற்ற தலைவர், சாதாரண தலைவர்களிலிருந்து பல வழிகளிலும் வேறுபடுகின்றார். அவர் மீது மக்கள் அன்பு மட்டுமல்ல, பக்தியும் கொண்டிருக்கின்றனர். ஒருவித பயபக்தியோடு அவரை நோக்குகின்றனர். அவரை மக்கள் மதிக்கின்றனர் என்பதைவிட அவரை வழிபடுகின்றனர் என்பதே பொருந்தும். இறுதியாக இத்தகைய தலைவர் மீது மக்கள் கண்மூடித்தனமாக நம்பிக்கை வைக்கின்றனர்.

"திரு. செல்வநாயகம் இத்தகைய அருட்கவர்ச்சி பெற்ற அசாதாரண தலைவர் என்பதில் ஐயமில்லை. அவர், சொற்செட்டு மிக்கவர்; நுட்பமும் தெளிவும் மிக்க சிந்தனையாளர்; தீர்க்கமான முடிவுகளை எடுக்க வல்லவர். அவர் தீர்க்கதரிசியாகவும், தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைத்தவராகவும், தமிழ்த் தேசிய இனத்தின் வளர்ச்சிப் பாதையில் இருந்த தடைகளை அகற்றியவராகவும், தனது மக்களின் வழிகாட்டியாகவும் விளங்கினார்.

"திரு. செல்வநாயகம் புதிய ஒரு தேசிய இனத்தை, சிங்களத் தேசிய இனத்திலிருந்து தனியே வேறுபட்டுநிற்கின்ற நவீன தமிழ்த் தேசிய இனத்தை உருவாக்கினார். இதுவே அவரது மகத்தான சாதனை. தமிழ்பேசும் மக்களின் அண்மைக்கால வரலாற்றுக்கு இதுவே அவரது மிகத் தலைசிறந்த பங்களிப்பு."

# "எனது கடையில் 2ம் எதிரி கத்தி வாங்கினார்"

## பிராமண இளைஞன் கொலை வழக்கில் சாட்சியம்

(பச்சிலைப்பள்ளி[

"இரண்டாம் எதிரி என்னுடைய கடைக்கு வந்து கத்தி வாங்கினார்" என்று புலோப்பளை இளைஞன் கொலைவழக்கில் சாட்சியமளித்த யா. செபஸ்தியாம்பிள்ளை கூறினார்.

1980ம் ஆண்டு ஜூன்மாதம் 26ம் திகதி புலோப்பளையைச் சேர்ந்த சா. குகபாலசர்மா [வயது 18[ என்ற பிராமண இளைஞனைக்கத்தியால் குத்திக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த மரியாம்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை ஆகிய இருவருக்கும் எதிராக கொலைக்குற்றம் சுமத்தி பளைப் பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு பளை சுற்று நீதிமன்றத்தில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி க. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது,

யா. செபஸ்தியாம் பிள்ளை தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

'சம்பவதினம் எனக்கு ஞாபகம் உண்டு. இந்த வழக்கின் 2ம் எதிரியை அரியம் எனவும் அழைப்பார்கள். சம்பவதினத்தன்று காலை 9 மணியளவில் 2ம் எதிரி என்னுடைய கடைக்குவந்து கத்திவாங்கினார். 2ம் எதிரியை முன்பே எனக்குத் தெரியும். அவர் எனது கடைக்குப் பொருட்கள் வாங்க வருவார். எனது சொந்த இடம் புலோப்பளை, அவரும் புலோப்பளையைச் சேர்ந்தவர்.

"2ம் எதிரி கத்திவாங்க கடைக்கு வந்து மடிக்கக்கூடிய வில்லுக் கத்தியொன்றை வாங்கிச் சென்றார். [வில்லுக்கத்தியைச் சாட்சி அடையாளம் காட்டினார்] நான் விற்பனை செய்த கத்தியில் அடையாளம் எதுவும் இடப்பட்டிருக்கவில்லை. விலை மட்டுமே பொறித்திருக்கும்.

"இக்கொலை சம்பந்தமாக பளைப்பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுத்தேன். அவர்களுக்கு நடந்தவற்றைக் கூறினேன். அனுமதிப் பத்திரம் பெற்றுத்தான் நான் கடை வைத்திருக்கின்றேன். எந்த விதமான கத்திகள் விற்கலாமென்பது எனக்குத்தெரியாது. எனது கடையில் ரசீதுப் புத்தகமுண்டு. 2ம் எதிரி ரசீது கேட்கததினால் நான் அவருக்கு ரசீது கொடுக்கவில்லை.

இவ் வழக்கில் பொலிஸ் தரப்பில் சார்பில் பளைப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. விஜேந்திராவின் அனுசரணையுடன் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும், எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். சிறீசிவாயாவும் ஆஜரானார்கள். பளைப் பொலிஸ் உத்தியோகத்தர் திரு. வ. சூரியப்பிரகாசம் வழக்கை நடத்தினார்.

## பாஸ்போர்ட்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செல்லவிருந்த 35 வடபகுதி இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்தே தேடுதல் வேட்டையை இரகசியப் பொலிசார் நடத்தினர்.

குடிவரவுகுடியகல்வுத்திணைக்களத்திலிருந்து சில மாதங்களுக்கு முன்னர் ஏராளமான 'பாஸ்போர்ட்' கள் மர்மமாக மறைந்ததும் இதுசம்பந்தமாக திணைக்கள ஊழியர்கள் சிலர் விசாரணைக்குட்படுத்தப் பட்டதும் தெரிந்ததே.

போலி குடிவரவு, குடியகல்வுத்திணைக்களத்தின் 'பாஸ்போர்ட்' மோசடியினால் பல நூற்றுக்கணக்கான வடபகுதி இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## யாழ். நகரில்...

[ ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் நோக்கிவந்த மினிபஸ்கள் இடைவழியிலேயே திருப்பப்பட்டன.

யாழ்ப்பாணம் பழைய மார்க்கட்டிலுள்ள தகரக் கொட்டகையில் மாம்பழம் விற்பனைசெய்யும் பகுதியில் மூண்ட தகராறென்றைத் தொடர்ந்தே இக்கைக்குண்டு வீச்சுக் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிகிறது இதனால் இருவர் காயமடைந்துள்ளனர்.

மண்டைதீவைச் சேர்ந்த குலசேகரம்பிள்ளை ஜெகநாதன் [வயது 25] கொக்குவிலைச் சேர்ந்த சண்முகநாதன் ரகுநாதன் [வயது 30) ஆகிய இருவரும் காயங்களுக்குள்ளாகி யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைக்குண்டு வீசியவர்கள் தலைமறைவாகிவிட்டதாகத் தெரியவருகிறது. இத்திருப் பழையபகை காரணமாயிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

## யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் தாதிமாரின் சட்டப்படி வேலை காரணமாக, அவசர சிகிச்சைப்பகுதி நேற்று இயங்கவில்லை.

யாழ். ஆஸ்பத்திரி வெளி நோயாளர் சிகிச்சைப்பகுதியிலும், கடுமையான நோயாளர் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டுமென்று வைத்திய அதிகாரி அறிவித்தல் கொடுத்துள்ளார்.


உங்கள் முதலீட்டிற்கு

27 % வட்டி

நாங்கள் வழங்குகின்றேம்

அத்துடன் உங்களுக்கு

★ ஆயுள் காப்புறுதி இனும்

★ வீட்டுப்பாவனைப் பொருட்கள்

(பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்)

நாம் உங்களுக்கு 41 வருடங்களாகச் சேவை செய்து வருகின்றேம்

என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றேம்.

★ நம்பிக்கை

★ பாதுகாப்பு

★ ஸ்திரத்தன்மை

வடமாகாணத்திலேயே மிகக்கூடிய முதலீட்டாளரைக் கொண்ட ஒரே ஒரு தனியார்துறை நிதி நிறுவனம்

TFC

த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,

191, 249 சி, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், போன்: 7680


# அந்தியேட்டிக் கிரியை அழைப்பு



**அமரர் குழந்தைவேலு அருணாசலம்**

(விநாயகமூர்த்தி)

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை
14-07-1981 செவ்வாய்க்கிழமை
காலை கீரிமலை புனித ஸ்தலத்திலும்
வீட்டுக்கிருத்தியம் பகல் அன்னாரின் இல்லத்திலும்
நடைபெறும்.

உற்றூர், உறவினர், நண்பர்கள் யாவரையும்
அன்புடன் அழைக்கின்றேம்.

இழப்பை ஈடு செய்ய முடியாது துயருறும் நெஞ்சங்களாவ
அமரர் கு. அருணாசலத்தின் குடும்பத்தினர்
திருப்பூர், மயிலிட்டி. (0302)

உ
சிவமயம்

# அந்தியேட்டி அழைப்பு

**ஸ்ரீமான் சின்னத்தம்பி முத்தையா**



அன்புடையீர்,
ஸ்ரீமான் சின்னத்தம்பி முத்தையா அவர்களின் அமரத்துவ சடங்குகளில் நேரில் பங்குபற்றியவர்கட்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கட்கும் நன்றி கூறுகின்றேம்.

15-7-81 ஆம் நாள் புதன் கிழமை நடைபெறவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரிகைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேம்.

"அன்னை இல்லம்",
16, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
[0306]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 30ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Regd No. QB 100286/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 339, 8126 Registered as a News Paper at the General Post Office SrLanka